# நோய் நாடி

டாக்டர் மோகன் தேவதாஸ்
எம்பிபிஎஸ். (சென்னை) எம்எஸ். (சென்னை) எம்எஸ். (மினிசோட்டா)



விஜயா பதிப்பகம்

# ஆசிரியரைப் பற்றி ...



டாக்டர்
மோகன் தேவதாஸ்

டாக்டர் மோகன் தேவதாஸ் அவர்கள், உலகப் புகழ் சத்துணவு விஞ்ஞானி, டாக்டர் இராசம்மாள் பா.தேவதாஸ் அவர்களுக்கும், நேர்மையும், நீதியும் கொண்ட சர்கிள் இன்ஸ்பெக்டர் திரு.தேவதாஸ் அவர்களுக்கும் மகனாகப் பிறந்தார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்றாற்போல கல்வி கற்கின்ற பொழுதே நன்றாகக் கல்வி கற்றார். தன்னுடைய இளமை கல்வியைத் தென்னிந்தியாவில் மான்செஸ்டர் என அழைக்கப்படும் கோவை மாநகரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் தொடங்கினார். அய்யா திரு.தி.க.அவினாசிலிங்கம் அவர்களின் கண்காணிப்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்து வந்த காரணத்தினால் நிறம்படக் கல்வி கற்க முடிந்தது.

தன் மருத்துவப் படிப்பை எம்.எஸ். பட்ட படிப்பு வரையிலும் சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்றார். மேல் நாடு சென்று அமெரிக்காவில் மின்னசோட்டா பல்கலைக் கழகத்தில் எம்.எஸ். பட்ட படிப்புப் படித்து ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டார்.

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல் எனுஞ் சொல்

என்ற திருக்குறளுக்கேற்ப கற்றறிந்தார், பலராம் புகழப்பட்டார். ஏழை-எளியவர் பால் இரக்கம் கொண்ட டாக்டர் மோகன்தாஸ் பலருக்கும் மருத்துவ உதவிகள் செய்து வருகிறார்.

பல ஆண்டுகள் அனுபவம் பெற்ற பிறகு தனியாக மருத்துவமனை ஆரம்பிக்க எண்ணி 1996 ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சிட்னியில் மருத்துவமனை தொடங்கி நன்கு நடத்தி வருகிறார். நம் தாய்த்திரு நாட்டினைச் சேர்ந்த இவர், ஆஸ்திரேலியா சென்று அந்நாட்டு மக்கள் நம்பிக்கையைப் பெற்று, அவர்கள் தன்னிடம் சிகிச்சை பெறும் அளவிற்கு உயர்ந்துள்ளார்.

தமிழ்நாட்டின் தலைமகனாம் அறிஞர் அண்ணா அவர்கள் பால் நல்ல ஈடுபாடு கொண்டவர். அவருக்கு நன்கு தெரிந்தவர். திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றியவர். பிறந்த நாட்டுக்கும் பேசும் மொழிக்கும் தொண்டாற்றும் பெருமகனார் ஆவார்.

டாக்டர் மோகன்தாஸ் கடவுள் மீது எல்லையற்ற பக்தி கொண்டவர், தளராத நம்பிக்கை கொண்டவர், யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கேற்ப தன்னுடைய பல ஆண்டுகால மருத்துவ அனுபவத்தில் தெரிந்து கொண்டதை மக்கள் புரியும்படி எளிய இனிய தமிழில் எழுதியுள்ளார்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | முன்னுரை | |
| I. | அறிந்து கொள்ளவேண்டிய சில மருத்துவ உண்மைகள் | 1 |
| II. | தலைவலி (Head Ache) | 7 |
| III. | கண்வலி (Conjunctivitis) | 12 |
| VI. | காதுவலி (Ear Ache) | 15 |
| V. | பல்வலி (Tooth Ache) | 16 |
| VI. | கழுத்துவலி (Neck Pain) | 18 |
| VII. | பேதி (Diarrhoea) | 22 |
| VIII. | வாய்ப்புண் (Mouth Sore) | 28 |
| IX. | தோலில் ஏற்படும் படை (Fungal Infection of the Skin) | 31 |
| X. | அடிவயிற்றில் வாயு சேர்க்கை (Flatus) | 33 |
| XI. | நீரிழிவு நோய் (Diabetes) | 35 |
| XII. | ஒவ்வாமை (Allergy) | 40 |
| XIII. | இன்ஃபுளுயன்சா (Influenza) | 44 |
| XIV. | தட்டம்மை, சின்னம்மை, பெரியம்மை (Measles), (Chicken pox), (Small pox) | 50 |
| XV. | இரண ஜன்னி (Tetanus) | 53 |
| XVI. | பால்வினை நோய்கள் (Veneral Diseases) | 54 |
| XVII. | ஹெச்.ஐ.வி நோய்கள் (HIV - AIDS) | 63 |
| XVIII. | பெண்களின் பிரச்சனைகள் (Health Problem of Women) | 66 |
| XIX. | மூட்டுவலியும் (Arthritis) | 71 |
| XX. | மனநோய்கள் (Mental Illnesses) | 72 |
| XXI. | காக்கை வலிப்பு (Epilepsy) | 79 |
| XXII. | பார்கின்சன்'ஸ் நோய் (Parkinson's Disease) | 83 |
| XXIII. | ஹாட்ஜ்கின்ஸ் நோய் (Hodgkins Disease) | 84 |
| XXIV. | இருதய கோளாறுகள் (Heart Diseases) | 86 |
| XXV. | புற்று நோய் (Cancer) | 97 |
| XXVI. | சட்ட விரோதமான மருந்துகள் (Unauthorised Drugs) | 117 |
| XXVII. | நோய்த் தடுப்பு முறைகள் (Immunisation) | 121 |
| XXVIII. | லேசர் சிகிச்சை (Laser Therapy) | 123 |
| XXIX. | பலவகை உணவுகளும் அவற்றிலுள்ள உணவுச் சத்துகளும் (Different Foods and their Nutritive Values) | 124 |
| XXX. | உணவே மருந்து (Diet Therapy) | 139 |

# மருந்து

1 மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

2 மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

3 அற்றல் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

4 அற்றது அறிந்து கடைபிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

5 மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

6 இழிவறிந்து உண்பான்கண் இன்பம் போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.

7 தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

8 நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

9 உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.

10 உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து.